வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 25.05.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையிலான மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.
- நாட்டில், உரம், எரிபொருள் மற்றும் அன்னியச் செலாவணி நிலவரங்கள் மீது, கூடுதல் கவனம் செலுத்த தேவை இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில், கடும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்மீது, விரைந்து வழக்குப் பதிவு செய்து தண்டனை வழங்க, முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அறிவுறுத்தி உள்ளார்.
- தமிழகத்தில் 3 அஇஅதிமுக எம்எல்ஏக்கள், சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஆளும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளனர்.

<u>*குவாட் மாநாடு (15)*</u>

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையிலான மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையிலான இம்மாநாட்டில், ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் திரு. டோஷிமிட்சு மோட்டேகி, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. பென்னி வோங், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோ ஆகியோர் பங்கேற்க உள்ளனர். முன்னுரிமை துறைகளில், குவாட் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், ஏற்கனவே அமலாகி வரும் முன் முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் இவர்கள் விவாதிக்க உள்ளனர்.

பரஸ்பர அக்கறை உள்ள சர்வதேச பிரச்சனைகள் குறித்தும், விவாதங்கள் இடம் பெற உள்ளன. இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 4 நாடுகள் அடங்கிய குவாட் கூட்டமைப்பு, இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதில், முக்கிய அமைப்பாக மேம்பட்டு இருப்பதும், இக்கூட்டமைப்பின் நடப்பு தலைமைநாடு என்ற முறையில், நாளைய கூட்டத்தை இந்தியா நடத்துவதும் குறிப்பிடத்தக்கது.

*__நிர்மலா – 1 (14)__*

மேற்காசிய நெருக்கடிச் சூழலுக்கு இடையே இந்தியாவில், உரம், எரிபொருள் மற்றும் அன்னியச் செலாவணி மீது கூடுதல் கவனம் செலுத்த தேவை இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் 37ஆம் ஆண்டு நிறுவன நாளையொட்டி, மும்பையில் இன்று நடைபெற்ற விழாவில், அவர் பேசுகையில், உலக அளவிலான சவால்களை மீறி, உள்நாட்டு வளர்ச்சியை பாதுகாக்க, கவனமான கொள்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

சிறுதொழில் துறைக்கான பல்வேறு முன் முயற்சிகளை, நிதியமைச்சர், இவ்விழாவின் போது தொடக்கி வைத்தார். சிறு தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களை, சரியான சந்தைக் கட்டமைப்பு மூலம், சரியான விலையில் வாங்குவதற்கான இணையதளமும், பிராந்திய ஊரக வங்கிகளுடன் இணைந்து, சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கான இணையதளமும் இதில் அடங்கும்.

*<u>நிர்மலா – 2 (15)</u>*

(வாய்ஸ்)

<u>சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் உரிய கடன் வசதியுடன் கிடைப்பதை உறுதிப்படுத்த புதிய முன் முயற்சிகளால் ஏதுவாகும் என்று, சிட்பி விழாவில் பேசுகையில், நிதியமைச்சர் கூறினார். இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு மிக முக்கிய இடம் இருப்பதாகவும், வேலைவாய்ப்புப் பெருக்கம் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியில் இத்துறையினரின் பங்கு முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். நிச்சயமற்ற உலகச் சூழலுக்கு இடையிலும், இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து வலுவாகவே இருப்பதாகவும், GST வசூல் அதிகரித்து, வங்கித் துறையின் வாராக் கடன்கள் குறைந்து வருவதுமே இதற்குச் சான்றாகும் என்றும் நிதியமைச்சர் கூறினார். அதே சமயம் மேற்காசிய நெருக்கடி காரணமாக, எரிபொருள், உரம் மற்றும் அன்னியச் செலாவணி நிலவரத்தில் நெருக்குதல் ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோளின் படி, இத்தகைய ஆதாரங்களை சேமிப்பதற்கான முயற்சிகளில் உதவ வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.</u>

*<u>பெட்ரோல் நிலவரம் -1 (15)</u>*

இதற்கிடையே, மேற்காசிய நிலவரங்கள் குறித்து, பல்வேறு அமைச்சகங்கள் இணைந்து இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில், மத்திய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா ஷர்மா பேசுகையில், நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதிப்படுத்த, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகக் கூறினார். நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த உற்பத்தி, நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் டன்னாக உயர்த்தப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். கடந்த 4 நாட்களில், வீட்டு உபயோகத்திற்கான 1 கோடியே 72 லட்சம் LPG

சிலிண்டர்களும், 24 ஆயிரம் டன் வர்த்தக LPG எரிவாயுவும், விநியோகம் செய்யப் பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். 5 கிலோ LPG சிலிண்டர்களும், தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதால், பொதுமக்கள் பீதி அடிப்படையில், எரிபொருள் வாங்கத் தேவையில்லை என்றும், மாற்று எரிபொருளுக்கு மாற முயன்றால் போதுமானது என்றும், அவர் குறிப்பிட்டார்.

*பெட்ரோல் நிலவரம் - 2 (14)*

(வாய்ஸ்)

வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், பிணக்குப் பகுதிகளில் உள்ள இந்தியர்களை, அந்தந்த நாடுகளுக்கான இந்தியத் தூதரகங்கள் தொடர்ச்சியான முறையில் தொடர்பு கொண்டு வருவதாகத் தெரிவித்தார். வளைகுடா பிராந்தியத்தில் உள்ள இந்திய கடலோடிகளுக்கு தேவையான எல்லா உதவிகளும் வழங்கப்படுவதாக அவர் கூறினார். நாட்டில் உரங்களின் ஒட்டுமொத்த நிலவரம் திருப்திகரமாகவே உள்ளதாக, உரத்துறை கூடுதல் செயலர் திருமதி. அபர்ணா ஷர்மா கூறினார். ஆண்டு முழுவதற்கும் 390 லட்சம் டன் உரங்கள் தேவைப்படும் என மதிப்பிட்டுள்ள நிலையில், தற்போது 200 லட்சம் டன் உரங்கள் கையிருப்பில் உள்ளதாக அவர் தெரிவித்தார். உரங்கள் மற்றும் உர உற்பத்திக்குத் தேவையான இடு பொருட்கள் போதிய அளவில் கிடைக்கிறதா என்பதை அமைச்சகம் தொடர்ச்சியான முறையில் மறு ஆய்வு செய்து நிலவரங்களை உரிய முறையில் நிர்வகித்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

***பத்ம விருதுகள் (10)***

புதுடெல்லி, குடியரசுத் தலைவர் மாளிகையில், இன்று மாலை நடைபெற்ற விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 2026ஆம் ஆண்டிற்கான பத்ம விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இவ்வாண்டு மொத்தம் அறிவிக்கப்பட்ட 131 பத்ம விருதுகளில், 66 விருதுகள், இன்றைய முதல்கட்ட விழாவின்போது, வழங்கப்பட்டன. 2 பத்ம விபூஷன் விருதுகள், 6 பத்ம பூஷன் விருதுகள், மற்றும் 58 பத்ம ஸ்ரீ விருதுகள் இதில் அடங்கும். எஞ்சியுள்ள விருதுகள், பின்னொரு நாளில், 2ஆம் கட்ட விருது விழாவின்போது வழங்கப்படும். இவ்வாண்டு பத்ம விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 பேர் பெண்கள் என்பதும், 16 பேருக்கு மரணத்துக்கு பிந்தைய விதத்தில் விருதுகள் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

***ஜோசப் விஜய் (15)***

தமிழகத்தில், கடும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்மீது, விரைந்து வழக்குப் பதிவு செய்து தண்டனை வழங்க, முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அறிவுறுத்தி உள்ளார். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய வழக்குகளை துரிதப்படுத்துவது குறித்து, சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு உத்தரவிட்டார். குற்றங்களை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குற்றங்களுக்கு எதிரான விழிப்புணர்வை அதிகரிக்கவும் அவர் வலியுறுத்தினார். காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51ஆவது கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ள நிலையில், இது குறித்தும் தமிழக முதலமைச்சர் இன்று ஆலோசனை மேற்கொண்டார். இதற்கிடையே, தூத்துக்குடி மாவட்டத்தில், 12ஆம் வகுப்பு மாணவி பாலியல் கொலை வழக்கில், குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை மரண தண்டனை விதித்து, மாவட்ட போக்ஸோ நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது. சம்பவம் நிகழ்ந்த 26ஆவது நாளிலேயே தீர்ப்பு வெளியாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

*__தமிழ்நாடு ராஜினாமா (10)__*

தமிழகத்தில் திரு. S.P. வேலுமணி தலைமையிலான அஇஅதிமுக அணியைச் சேர்ந்த 3 எம்எல்ஏக்கள், சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஆளும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளனர். மதுராந்தகம் தொகுதியில் வெற்றி பெற்ற திருமதி. மரகதம், பெருந்துறை தொகுதியில் வெற்றி பெற்ற திரு. ஜெயகுமார், தாராபுரம் தொகுதியில் வெற்றி பெற்ற திருமதி. சத்யபாமா ஆகியோர், இம்மூவர். இவர்களின் ராஜினாமாவைத் தொடர்ந்து, தமிழக சட்டமன்றத்தில், அஇஅதிமுகவின் வலு, 47-ல் இருந்து 44 ஆக குறைந்துள்ளது. திரு. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியின் வலுவும், திரு. S.P. வேலு மணி தலைமையிலான அணியின் வலுவும், ஒரே அளவில் 22ஆக உள்ளது.

*__தமிழ்நாடு பள்ளி (10)__*

தமிழக அரசு, வரும் ஜூன் முதல் வார கோடை வெய்யில் நிலவரம் குறித்து, வானிலை ஆய்வு மையத்திடம் அறிக்கை கேட்டுள்ளதாகவும், இந்த அறிக்கை அடிப்படையில், பள்ளிகள் திறப்பு குறித்து முடிவெடுக்கப்படும் என்றும், மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மாணவர்களுக்கான எந்தவொரு திட்டமும், நிறுத்தப்பட மாட்டாது என்றும் கூறினார். போக்ஸோ சட்டம் குறித்து அதிக அளவில் பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

***<u>ஆதவ் அர்ஜுனா (10)</u>***

தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா இன்று சென்னையில், ஒலிம்பிக் ஆர்வம் உள்ள இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு, 5 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் காசோலை வழங்கினார். திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கத் தேவையான பொருளாதார உதவிகளை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு அரங்கங்கள், பயிற்சிக் கூடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

***<u>வானிலை (14)</u>***

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், வரும் 31ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, சேலம், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில், 11 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

***ஐபிஎல் (8)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், தரம்சாலாவில் நாளை நடைபெற உள்ள முதலாவது குவாலிபயர் போட்டியில், பெங்களூரு – குஜராத் அணிகள் மோத உள்ளன. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி, நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும். நாளைய போட்டியில் தோல்வியடையும் அணிக்கு, 2ஆவது குவாலிபயர் போட்டியில், மற்றொரு வாய்ப்பு கிடைக்கும். நியூ சண்டிகரில் நாளை மறுநாள் நடைபெற உள்ள எலிமினேட்டர் போட்டியில், ஹைதராபாத் – ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. எலிமினேட்டர் போட்டியில் வெற்றி பெறும் அணி, 2ஆவது குவாலிபயர் போட்டிக்குத் தகுதி பெறும்.

***நீட் நீதிமன்றம் (19)***

நீட் தேர்வு நடத்தும் பொறுப்பை, தேசிய தேர்வு முகமை அல்லாது, வலுவான மற்றொரு தன்னாட்சி அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரும் மனுக்கள்மீது, உச்சநீதிமன்றம்,தேசிய தேர்வு முகமையின் கருத்துக்களை நாடி உள்ளது. தேசிய தேர்வு முகமை வரும் வியாழக்கிழமைக்குள், இது குறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், முகமையின் செயல்பாடுகளை திருத்தி அமைப்பது குறித்து, கடந்த ஆண்டு, முன்னாள் இஸ்ரோ தலைவர் திரு. K. ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் கொடுத்த பரிந்துரைகள் மீது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை, பிரமாணப் பத்திரத்தில் விளக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே, நீட் – UG வினாத்தாள் வெளியான விவகாரம் பற்றிய வழக்கில், புனேயைச் சேர்ந்த இயற்பியல் விரிவுரையாளர் மணீஷா ஹவல்தாரை 6 நாள் காவலில் வைத்து விசாரிக்க, டெல்லி நீதிமன்றம், சிபிஐ-க்கு அனுமதி அளித்துள்ளது. கடந்த 22ஆம் தேதி சிபிஐ-ஆல் கைது செய்யப்பட்ட மணீஷா ஹவல்தார், இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். நீட்–UG வினாத்தாள் தயாரிப்பில்,

மொழிபெயர்ப்பாளராக செயல்பட்ட அவர், மொழிபெயர்ப்புக்காக அனுப்பப்பட்ட கேள்விகளை, குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களோடு இணைந்து, வெளி ஆட்களுக்கு வழங்கியதாக கூறப்படுகிறது.

***<u>ஹஜ் பயணம் (12)</u>***

5 நாள் வருடாந்திர ஹஜ் பயணம் இன்று தொடங்கி உள்ள நிலையில், இந்தியா உள்பட உலகெங்கிலும் இருந்து லட்சக்கணக்கிலான பயணிகள், சவுதி அரேபியாவின் மினா நகருக்கு வந்து சேர தொடங்கி உள்ளனர். மினாவில் இருந்து இவர்கள் மெக்கா சென்று, அங்கேயே இரவு தங்கிய பின்னர், பிரதான ஹஜ் சடங்குகளுக்காக நாளை அதிகாலை அரஃபாத் சமவெளிப் பகுதிக்கு புறப்பட்டுச் செல்வார்கள். இந்தியாவில் இருந்து இம்முறை சுமார் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் ஹஜ் பயணம் மேற்கொள்வதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இப்பயணம் சுமூகமாகவும், பாதுகாப்பாகவும் அமைவதை உறுதிப்படுத்த அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. ஹஜ் சுவிதா மொபைல் செயலி மூலம், பயணிகளுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் குறைதீர்ப்பு வசதிகள் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.